# சிறகடிக்கும் மலையகத்தின் சிறகுகள்....

(பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பினால் நடாத்தப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி சார்ந்து மாணவர்களின் ஆக்கங்களும், அதிபர்களின் கருத்துக்களும்)

**(Students' Article, creations and principals' comments on the leadership training conducted by the Voice of the Plantation People Organization)**



## பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு - VOPP

VRIDDHI விரித்தி

UNOPS

Australian Aid

Voice of the Plantation People Organization VOPP

# முகவுரை

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பானது விளிம்புநிலை வாழ் மலையக மக்களுக்காக குறிப்பாக காலி மாத்தறை, களுத்துறை, குருநாகல் மற்றும் கம்பகஹ மாவட்டத்தில் பணிபுரிந்து வருகின்றது. இவ்வமைப்பானது காணி மற்றும் வீட்டுரிமை, கல்வி, இன அடையாளம் மற்றும் மலையக மக்களின் அடிப்படை உரிமைகளுக்காக குரல் கொடுத்து வருகின்ற அதேவேளை இதற்காக பல வழிமுறைகளை கையாண்டு வருகின்றது. அதன் ஒரு பகுதியாக மலையக மாணவர்களின் சமூகம்சார் அக்கறை மற்றும் வகைப்பொறுப்பை ஊக்குவிப்பதற்காக பாடசாலை மட்டத்திலே தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. அந்த வகையில் கடந்த 2024 நவம்பர் - 2025 மே மாதம் வரையான காலப்பகுதியில் விரித்தி, UNOPS நிறுவனங்கள் மற்றும் அவுஸ்ரேலியா அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மாத்தறை, காலி மற்றும் களுத்துறை மாவட்டங்களின் 6 பாடசாலைகளில் தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்கி வைத்தது. அந்த பயிற்சிகளில் கலந்துக்கொண்ட மாணவர்கள் தங்கள் கருத்துக்கள் மற்றும் ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தினர். அவர்களின் ஆக்கத்திறன்களை எழுத்து வடிவில் உருவாக்கி அவர்களை பாராட்டுவதற்காக நூல் ஒன்றை தயாரிப்பதற்கு நாம் முடிவு செய்தோம். அந்த வகையில் இந்த நூல் மிக எளிமையான முறையிலே தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த நூலில்

உள்ள குறைப்பாடுகளை பொறுத்துக்கொண்டு மாணவர்களின் ஆக்கத்திறன்களை பாராட்டுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அந்த வகையில் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியை வழங்குவதற்காக நிதி உதவி வழங்கிய விரித்தி, UNOPS நிறுவனங்களுக்கும், அவுஸ்ரேலியா அரசாங்கத்துக்கும் ஒருங்கிணைந்த இந்த கருத்திட்டத்தில் எம்மோடு இணைந்து எமக்கு பல வழிகளில் உதவிய பிரதிபா மீடியா (PMN) நிறுவனத்துக்கும் HNRDF நிறுவனத்துக்கும், பயிற்சிகளை வழங்குவதற்கு பாடசாலை மட்டத்தில் எமக்கு உதவிய அதிபர்களான திரு. ஜீவராஜ், திரு. ராஜேந்திரம், அருட்பணி. செயஸ்டியன் நாகராஜ் அடிகளார், ஜனாப் ஏ.எஸ்.எம். கலீல், திரு. ராஜேந்திரன் மற்றும் ஆர். ஜெயகுமார் உட்பட ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரிய, ஆசிரியர்களுக்கும் மற்றும் இதற்காக உழைத்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்டனி ஜேசுதாஸன்
நிறைவேற்று இயக்குனர்
பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு

## Foreword

The Voice of the Plantation People Organization is dedicated to advocating for the rights and upliftment of the marginalized

Malaiyaha (Plantation) community, particularly in the districts of Galle, Matara, Kalutara, Kurunegala, and Gampaha. Our work focuses on securing land and housing rights, promoting education, preserving ethnic identity, and protecting the fundamental rights of the hill country people. To achieve these goals, we employ a variety of strategies and initiatives.

One of our key initiatives has been fostering leadership skills among Malaiyaha students through school-based training programs aimed at promoting social awareness and responsibility. Between November 2024 and May 2025, with generous financial support and programme advisory from Vriddhi, UNOPS, and the Government of Australia, we conducted leadership training sessions in six schools across the Matara, Galle, and Kalutara districts.

The creativity and insights expressed by the students during these trainings were both inspiring and thought-provoking. As a tribute to their voices and to celebrate their talent, we decided to compile this book. It has been prepared in a simple and accessible format, with the primary aim of honoring student creativity. We kindly ask for your understanding of any shortcomings and invite you to focus on the spirit of the students' contributions.

We extend our heartfelt gratitude to Vriddhi, UNOPS, and the Government of Australia for their financial support and programme advisory, and to Prathiba Media Network and Human and Natural Resource Development Foundation (HNRDF) for their collaboration and assistance throughout this integrated project. Special thanks also go to the school principals - Mr. Jeevaraj, Mr. Rajendram, Rev. Fr. Sebastian Nagaraj, Mr. A.S.M. Kamil, Mr. Rajendran, Mr. R. Jeyakumar, teachers and supporters for their invaluable support in facilitating the trainings. We are also deeply thankful to the dedicated teachers and everyone who contributed to making this initiative a success.

Anthony Jesudasan
Executive Director
Voice of the Plantation People Organization

**தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்பட்ட பாடசாலைகள்**

1. கா/திவித்துறை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம் - காலி மாவட்டம்
2. மாறை/பெவர்லி தமிழ் மகா வித்தியாலயம் - மாத்தறை மாவட்டம்

3. மாறை/தெனியாய புனித மத்தேயு தேசிய பாடசாலை – மாத்தறை மாவட்டம்
4. கா/தல்கஸ்வல தமிழ் வித்தியாலயம் - காலி மாவட்டம்
5. கா/தலங்கா சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம் - காலி மாவட்டம்
6. மே/க/குலொட் தமிழ் வித்தியாலயம் - களுத்துறை மாவட்டம்

## Schools where leadership training was provided

1. GA/Divuthurai Tamail Maha Vidyalaya – Galle District
2. MR/Bevarly Tamil Maha Vidyalaya – Matara Disrict
3. MR/Deniyaya St' Methiw National Collage – Matara District
4. GA/Thalgaswala Tamil Vidyalaya – Galle District
5. GA/Thalanga Saraswathi Tamil Maha Vidyalaya – Galle District
6. WE/K/ Clode Tamil Maha Vidyalaya – Kalutara District

## தலைமைத்துவப் பயிற்சியின் பின் மாணவர்களில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பாக பாடசாலை அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களின் கருத்துக்கள்:

---

**அருட்தந்தை செபஸ்டியன் நாகராஜ் அடிகளார் - தமிழ் பிரிவு அதிபர் - மாறை/தெனியாய புனித மத்தேயு தேசிய பாடசாலை – மாத்தறை மாவட்டம்**

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு வழங்கிய தலைமைத்துவப் பயிற்சி மிக சிறப்பாக இருந்தது. தலைமைத்துவப் பயிற்சியை பெற்ற மாணவர்கள் பாடசாலையில் சிறப்பாக தமது தலைமைத்துவத்தை கொடுக்கின்றார்கள். கருத்தரங்குகளை ஒழுங்குச் செய்யும் போது பயிற்சி பெற்ற மாணவர்கள், மாணவிகள் முன்னின்று எல்லா ஏற்பாடுகளையும் செய்கின்றார்கள். பயிற்சி பெற்ற மாணவர்களில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன.

The leadership training provided by the Voice of the Plantation People Organization was very good. The students who received the training are now demonstrating strong leadership in their schools. When we organize seminars, these trained students take the lead and handle all the arrangements. Many positive changes are evident in them.

Rev. Fr. Sebastian Nagaraj – Section Principal of the St' Mathews National College, Deniyaya.

.....................................................................................

**திரு. ஜீவன் - ஆசிரியர், மாறை / பெவர்லி தமிழ் மகா வித்தியாலயம் - மாத்தறை மாவட்டம**

பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு எமது பாடசாலையுடன் இணைந்து பல செயற்பாடுகளை முன்னெடுக்கின்றார்கள். அதேபோல் கடந்த காலத்தில் எமது மாணவர்களுக்கு வழங்கிய தலைமைத்துவப் பயிற்சி மிகச் சிறப்பாக இருந்தது. பயிற்சி பெற்ற அனைத்து மாணவர்கள் வாழ்விலும் குறிப்பிட்டத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பாடசாலையில் ஏற்பாடு செய்கின்ற சகல செயற்பாடுகளிலும் இவர்கள் முன்னின்று செயற்படுகிறார்கள். இவ்வாறான பயிற்சிகள் ஏற்கனவே சிங்கள மொழியில் நடாத்தப்பட்டன. எனினும் பிள்ளைகளுக்கு பூரண அறிவு சென்றடையவில்லை. இந்த பயிற்சியானது தமிழ் மொழி மூலம் முழுமையாக நடாத்தப்பட்டமையினால் மாணவர்கள் சிறப்பாக செயற்பட்டார்கள். இவ்வாறான பயிற்சிகள் ஆறு மாதத்துக்கு ஒரு முறையாவது நடாத்துவது சிறந்தது.

The Voice of the Plantation People Organization is carrying out many activities in collaboration with our school. Recently, they provided leadership training to our students, which was very effective. There have been significant positive changes in the lives of all the students who received the training. They are now taking the lead in all school activities.

Previously, such trainings were conducted in Sinhala, which the children did not fully understand. Since this training was conducted entirely in Tamil, the students were able to engage more effectively and perform well. It would be best to conduct such trainings at least once every six months.

Mr. Jeewan – Teacher of MR/Bevarly Tamil Maha Vidyalaya – Matara District

.......................................................................................................

**ஜனாப் ஏ.எஸ்.எம். கலீல், அதிபர் - கா/தல்கஸ்வல தமிழ் வித்தியாலயம் - காலி மாவட்டம்**

ஏற்கனவே இது போன்ற பயிற்சி ஒன்று சிங்கள மொழியில் நடாத்தப்பட்டது. மாணவர்கள் 40 விகிதமான விடயங்களையே புரிந்துக்கொண்டார்கள். ஆனால் பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பால் நடாத்தப்பட்ட பயிற்சி விதம் சிறப்பாக இருந்தமையாலும், தமிழ் மொழியில் பூரணமாக நடாத்தப்பட்டமையினாலும் மாணவர்கள் சகல விடயங்களையும் சிறப்பாக உள்வாங்கினார்கள். திரும்பவும் இவ்வாறதொரு பயிற்சி வேண்டுமென்று கேட்கின்றார்கள். சில வேளைகளில் மாணவர்கள் எங்களிடமே பல கேள்விகளை கேட்கின்றார்கள். விளையாட்டுகளுக்காக மைதானத்துக்கு போகும் போது அங்கே தலைமைத்துவப் பண்புகளை காட்டுகின்றார்கள். பாடசாலை விடயங்கள் தொடர்பாக

ஆசிரியர்களுடன் கலந்துரையாடுகின்றார்கள். மாணவர்களில் பல முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. மேலும் இந்த பயிற்சி அவசியம். அதேபோன்று பெற்றோர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக அவர்களுக்கும் பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும்.

A similar training was previously conducted for our school students in Sinhala, but they understood only about 40 percent of the knowledge. However, the training provided by the Voice of the Plantation People Organization was excellent and conducted entirely in Tamil, allowing the students to fully grasp the content. They are now requesting such training again. The students often ask us many questions about leadership and demonstrate leadership qualities. On the playground, they show responsibility and teamwork. They also discuss school-related matters with the teachers. Many positive changes are evident in the students. This kind of training is essential.

In addition, similar training should be provided to parents to help them understand their duties and responsibilities.

Mr. A. S. M. Kalil, Principal of GA/Thalgaswala Tamil Vidyalaya – Galle District

---

# மாணவர்களின் படைப்புகள் (ஆக்கங்கள்)

# Creations of the Students

---

## நாமெல்லாம் ஒரு நாட்டவர்கள்

சாதியினால், இனத்தினால், மதத்தினால்
பிரிந்துக்கிடக்கின்றோம்.
பிரிவுகளை ஒழித்து ஒற்றுமையை வளர்க்க
தலைமைத்துவத்தை கையில் எடுப்போம் நல்
மாணவர்களாய்.

**கவிஷ்க இஷான்**
**தரம் 11**
**கா/தலங்கா சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம் - காலி மாவட்டம்**

**We are one nation, yet divided by caste, ethnicity, and religion.**
**As responsible students, let us lead the way in breaking down these barriers and building unity.**

**Kvishka Ishan**
**Grade 11**
**GA/Thalanga Saraswathi Maha Vidyalaya – Galle District**

-----------------------------------------------------------------------------------------------------

## தலைமைத்துவத்தை வளர்ப்பதற்கு முயற்சியெடுப்பேன்.

மலையக மாணவர்களின் தலைமத்துவப் பண்புகளை வளர்ப்பதற்காக எமக்கு வழங்கப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி மிக சிறப்பாக இருந்தது. அதேநேரம் இலைமறைக் காயாக இருந்த எமது திறமைகளை மற்றும் ஆளுமைகளை வெளியில் கொண்டு வருவதற்கு எடுத்த முயற்சி எமக்கு மகிழ்ச்சியை தருகின்றது. பெற்றவர்கள் பெரியவர்களை மதிப்பதற்கு, சமூகத்துக்கு சேவை செய்வதற்கு, சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்கு தலைமைத்துவம் மிக மிக அவசியம். எனவே எனது தலைமைத்துவத்தை வளர்ப்பதற்கு முயற்சியெடுப்பேன்.

**எஸ். சான் சாமர்**
**தரம் 11**
**கா/தலங்கா சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம்**

---

## தலைமைத்துவம்

நான் முன்னேற உதவுவது தலைமைத்துவம்.
சமூகத்தை மாற்ற உதவுவதும் தலைமைத்துவம்.
தலைமைத்துவப் பயிற்சியின் மூலம் தலைமைத்துவத்தின் பண்புகளை அறிந்தேன். எனது பெற்றாரின் அன்பை புரிந்துக்கொள்ள முயற்சித்தேன். மலையக மக்களின் வாழ்நிலையை புரிந்துக்கொண்டேன். மாற்றத்துக்காக செயற்படுவேன்.

**சசிகுமார் ஜனனி வட்சலா**
**கா/தல்கஸ்வலை தமிழ் வித்தியாலயம்**

# என் அப்பா

2025.03.27 எமது பாடசாலைக்கு ஒரு முக்கியமான நாள். பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு தலைமைத்துவ பயிற்சியை எமக்கு வழங்கியமை மிக முக்கியமாகும். இந்த நாளில் எங்களுக்காக பல துன்பங்களை அனுபவிக்கின்ற என் அப்பாவை மதிக்காமல் எவ்வளவு கஸ்டப்படுத்தியிருக்கின்றேன் என்பதை புரிந்துக்கொண்டேன். பல புதிய விடயங்களை கற்றுக்கொண்டேன். அந்த விடயங்களை வாழ்வில் கடைப்பிடிப்பேன்.

**எஸ். சுந்தியா**
**தரம் 10**
**கா/தல்கஸ்வலை தமிழ் வித்தியாலயம்**

---

# தலைமைத்துவம் நாட்டுக்கும், சமூகத்துக்கும் மிக முக்கியம்.

எமது வாழ்க்கைக்கு தலைமைத்துவம் மிக முக்கியம். அதேபோன்று சமாதானமும், நல்லிணக்கமும் முக்கியம்.
மாணவர்கள் தலைமைத்துவத்துவ பண்புகளோடு வாழ்வது நாட்டுக்கும், சமூகத்துக்கும்
மிக முக்கியம்.

**ரஜீவ் காந்தி ரஷ்மீ பிரிஸ்கிலா**

---

## நல்ல தலைவர் வேண்டும்.

எதிர்க்க வேண்டும் சாதி பேதத்தை
மதிக்க வேண்டும் தலைமைத்துவத்தை
நாடு வளர்வது நாட்டின் வளத்தால்
மனிதர்கள் வளர்வது சிறந்த தலைமைத்துவத்தால்
நல்ல குடும்பத் தலைவர் வேண்டும் வீட்டிற்கு
நேர்மையான தலைவர் வேண்டும் நாட்டிற்கு.

**எஸ். பசிந்து**
**தரம் 10**
**கா/தல்கஸ்வலை தமிழ் வித்தியாலயம்**

---

## மனிதர்கள் தலைவர்கள் ஆவது தலைமைத்துவத்தால்

நாடு வளர்வது நாட்டின் வளத்தால்
நாங்கள் வளர்வது தலைமைத்துவத்தால்
பயிர்கள் தலைப்பது மண்ணின் வளத்தால்
மனிதர்கள் தலைவர்கள் ஆவது தலைமைத்துவத்தால்.

**டி. சதுர்ஷிகா**
**தரம் 11**
**கா/தல்கஸ்வலை தமிழ் வித்தியாலயம்**

---

## மலையக மக்களின் வாழ்வு சிறக்க வேண்டும் பெரிதாய்.

ஒரு வேலையை செய்வதற்கு போட வேண்டும் திட்டம்.
ஆனால் யாருக்கும் புரியாது மலையக மக்களின் கஷ்டம்.
லயத்து முற்றத்தில் இருக்கு வெற்றிடம்.
கட்டிக்கொடுக்க வேண்டும் மலையக மக்களுக்கு கட்டிடம்.
வட்டிக்கு கொடுக்கிறான் வட்டிக்காரன்
மலையக மக்களின் கடன் ஏறுது மலையாய்.
கூட்ட வேண்டும் சம்பளத்தை வெகுவாய்.
மலையக மக்களின் வாழ்வு சிறக்க வேண்டும் பெரிதாய்.

**கே. இசுரு இஷான்**
**தரம் 11**
**கா/தல்கஸ்வலை தமிழ் வித்தியாலயம்**

---

## உரிமைகளுடன் உயர்வோம்..

மலையக மக்கள் நாம்...
வாழ்ந்தோம் வாழ்ந்தோம்
அடிமைகளாகவே வாழ்ந்தோம்
இனி உயர்வோம் உயர்வோம்
உரிமைகளுடன் உயர்வோம்.

**ஜீ. சந்தமாலி தில்ருக்ஷி**
**கா/தல்கஸ்வலை தமிழ் வித்தியாலயம்**

---

## எனது சமூகத்துக்கு தலைமைத்துவத்தை கொடுப்பேன்.

தலைமைத்துவப் பயிற்சியின் போது மலையக மக்களாகிய எமது வாழ்வியலை புரிந்துக்கொள்ள சிறந்த வாய்ப்புக் கிடைந்தது. நான் என்னையே மீளாய்வு செய்வதற்கும் என் குறைப்பாடுகளை கண்டறிவதற்கும், என் எதிர்கால வாழ்வை சிறப்பாக திட்டமிடுவதற்குமான அறிவு கிடைத்தது. எனவே எனது சமூகத்துக்கான தலைமைத்துவத்தை கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன்.

**எம். மதுசானி**
**தரம் 10**
**மாறை/பெவர்லி தமிழ் மகா வித்தியாலயம்**

---

## சமுதாய மாற்றத்துக்காக செயற்படுவேன்.

தலைமைத்துவப் பயிற்சியில் முரண்பாடுகளை தவிர்த்தல், சமாதானத்தை கட்டியெழுப்புதல், ஒரு சமுதாயத்தை வழிநடத்துதல், சிறந்த தலைமைத்துவப் பண்புகள், சமுதாய பொறுப்பு போன்ற அநேக விடயங்களை கற்றுக்கொண்டோம். இவ்வாறானதொரு தலைமைத்துவப் பயிற்சியை பெற்றது இதுவே முதல் தடைவை. இது எனது வாழ்க்கையை மிக ஆழமாக சிந்திக்க வைத்துள்ளது. நான் எதிர்காலத்திலே சமுதாய மாற்றத்துக்காக செயற்படுவேன்.

**எஸ். யவிஸ்கான்**
**தரம் 12**
**மாறை/பெவர்லி தமிழ் மகா வித்தியாலயம்**

---

## எனது சமூக முன்னேற்றம்

நான் பெற்ற தலைமைத்துவ பயிற்சியில் என்னை நான் அறிந்துக்கொண்டு எனது பலம், பலவீனங்களை அறிந்துக்கொள்ள கூடியதாக இருந்தது. சமூக மாற்றத்திற்காக கூட்டுறவுடன் செயற்படுவது எப்படி என்பதை அறிந்துக்கொண்டேன். எனது மலையக சமூகத்தின் துன்ப நிலைகள் தொடர்பாக அறிந்துக்கொண்டதோடு எனது சமூக முன்னேற்றத்திற்கு நான் கல்வியிலே உயர்வது மிக முக்கியம் என்பதை புரிந்துக்கொண்டேன். எனவே எனது இலட்சியத்தை அடைய முயற்சிப்பதோடு எனது சமூகத்தை மாற்றுவதற்குமான முயற்சிகளை எடுப்பேன்.

**எஸ். நிசன்சலா**
**தரம் 12**
**மாறை/பெவர்லி தமிழ் மகா வித்தியாலயம்**

---

## கல்வியே எனது சமூகத்தின் விடியல்

தலைமைத்துவம் என்றால் என்ன? தலைமைத்துவத்தின் பண்புகள் என்ன? ஏன் மலையக மாணவர்களுக்கு தலைமைத்துவம் முக்கியம் என்பதையும், நான் யார் என்பதையும், எனக்குள்ள பொறுப்புகள் என்ன என்பதையும் மிக தெளிவாக கற்றுக்கொண்டேன். எனது கல்வியே எனது சமூகத்தின் நாளைய விடியலை ஏற்படுத்துமென புரிந்துக்கொண்டேன். அத்தோடு சமாதானமும், ஒற்றுமையும் ஒரு சமூக வளர்ச்சிக்கு எவ்வளவு முக்கியம் என்பதை பயிற்சி

மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியது. நான் எனது கல்வியில் சிந்தனையைக்கொண்டு எதிர்காலத்தில் சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவேன்.

**ஆர். சிரோமி**
**தரம் 13**
**மே/களு/குலோடன் தமிழ் மகா வித்தியாலயம்**

---

## கண்ணீர்விட்டேன்

எனது அம்மா வெளிநாட்டில் பணிப்பெண்ணாக பணி புரிகின்றார். அவர் அங்கேபடும் துன்பங்களை நான் ஒருநாளும் சிந்தித்தது கிடையாது. அவர் எப்போது பணம் அனுப்புவார் என்று சிந்திப்பேனே தவிர அவரின் வாழ்க்கை நிலையை சிந்தித்ததே கிடையாது. ஏனோதானோ என்று வாழ்ந்தேன். இன்றைய நாள் பயிற்சியில் என்னைப்பற்றி நான் சிந்திக்க முடிந்தது. என் பெற்றோரை நினைத்து நான் கண்ணீர்விட்டேன். இனிமேல் என் பெற்றோரை புரிந்துக்கொண்டு செயற்படுவேன் என உறுதிக்கொண்டேன். இந்த பயிற்சி எனக்கு பல விடயங்களை கற்றுக்கொடுத்துள்ளது.

**வீ. தற்சாஜினி**
**தரம 08**
**புனித மத்தேயு தேசிய பாடசாலை (தமிழ் பிரிவு)**

---

## பலிவாங்குவதில்லை என உறுதியெடுத்துள்ளேன்.

எங்களுக்கு வழங்கப்பட்ட தலைமைத்துவப் பயிற்சி மிகவும் ஜொலியாக இருந்தது. அதேநேரம் மிக பிரயோசனமாக இருந்தது. பலிவாங்காமல் மற்றவர்களை மதிப்பது எப்படி என்று கற்றுக்கொண்டேன். பொதுவாக என்னோடு யாராவது சண்டை போட்டால் அவர்களுடன் கோபத்தோடு ஒதுக்கி வைத்துவிடுவேன். ஆனால் இந்த பயிற்சிக்குப் பிறகு யாரையும் பலிவாங்குவதில்லை என்று உறுதியெடுத்துள்ளேன்.

**எஸ். கே. சத்தியபிரியா**
**தரம் 08**
**புனித மத்தேயு தேசிய பாடசாலை (தமிழ் பிரிவு)**

---

## மற்றவர் சுதந்திரத்தை பாதுகாத்தல்

தலைமைத்துவப் பயிற்சியிலே தன்னைத்தான் பாதுகாத்துக்கொள்வதோடு, மற்றவர்களின் சுதந்திரத்தை பாதிக்காத வகையில் சமூகத்தில் செயற்படுவது எவ்வாறு என்பதை புரிந்துக்கொண்டேன். வாழ்க்கையில் முன்னேற்றமடைவதற்கு புதிய புதிய விடயங்களை தேடி கற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும், என்னுடைய நிலையிலிருந்து வெளியில் சென்று பல விடயங்களை சிநதிக்க வேண்டுமென்று கற்றுக்கொண்டேன். நான் வாழும் சமூகத்தின் துன்பநிலையை மாற்றுவதற்கு எனக்கு பொறுப்பு இருக்கின்றது. எனவே அதனை செய்வதற்காக சிறப்பாக

கல்வி கற்று உயர்ந்த இடத்திற்குச் சென்று எனது பாடசாலைக்கும், எனது சமூகத்துக்கும் பெருமையைத் தேடித்தருவதற்கு முயற்சிப்பேன்.

**ஆர்.துஷானி**
**தரம் 10**
**திவித்துறை விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயம்**

---

# தலைமைத்துவத்தை ஏற்பது எப்படி?

ஒரு மாணவன் பாடசாலையிலும் சரி தான் வாழும் சமூகத்திலும் சரி தலைமைத்துவத்தை ஏற்பது எப்படி? தலைமைத்துவப் பண்புகள் என்ன? எனது மலையக சமூகம் எந்தளவு துன்பங்களை அனுபவிக்கின்றது? என்பதையும், நான் யார்? என்பதையும் மிகத் தெளிவாக புரிந்துக்கொள்ள தலைமைத்துவப் பயிற்சி சிறந்த முறையில் வழிக்காட்டியது. அதேநேரம் எனக்கு கிடைக்கின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் என்னுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்துக்காக எப்படி பயன்படுத்த வேண்டுமென புரிந்துக்கொண்டமையினால் எனக்கு கிடைக்கும் வாய்ப்புகளை சிறப்பாக பயன்படுத்தி எதிர்காலத்திலே எமது சமூகத்தை உயர்த்துவதற்கு செயற்படுவேன்.

**ஆர். சுவேத்தா**
**தரம் 10**
**மே/களு/குலோடன் தமிழ் மகா வித்தியாலயம**

---

# வளவாளரே,

**வளவாளரே,**

உமது வார்த்தையில் என் மனம் கவிழ்ந்து போச்சி
உரிமைக்கு குரல் கொடுக்கும் உமது வார்த்தை என்னை
தட்டியெழுப்பியது.
தலைமைத்துவ பண்போடு நான் பணிபுரிய என்னுள் வந்தது
உத்வேகம்.
மலையக மக்களின் விடிவுக்காய் குரல் கொடுப்பேன்
எப்போதும்.

**டி. தக்சிலா,**
**தரம் 11**
**கா/தலங்கா சரஸ்வதி தமிழ் வித்தியாலயம்**

---

# பெற்றோர் தம் வாழ்வை இழக்கின்றனர்

சூரியன் உதயமாக வேண்டும் என்பதற்காக நிலவு
மறைவதைப் போல்,
நாம் செழிப்பாக மலர வேண்டும் என்று நம் பெற்றோர்
தங்கள் கவலையை மறைத்து,
புன்னகை என்னும் முகமூடியை அணிந்து தங்கள்
வாழ்க்கையை அர்ப்பணிக்கின்றனர்.
தேனீ உயிர் வாழ பூ வாடுகினறது.
பிள்ளைகள் வளர பெற்றோர் தம் வாழ்வை இழக்கின்றனர்.

எம். மதுஷானி
தரம் 12
**கா/தலங்கா சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம்**

---

# உண்மைச் சம்பவம்

**பெயர்:** எம். மதுஷானி

**தரம்:** 12

**பாடசாலை:** கா/தலங்கா சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலயம்

**பெற்றோர்:**

**தந்தை:** எஸ்: விசால்

**தாய்:** எஸ்: மகேஸ்வரி

தந்தை தோட்டத் தொழிலாளியாக பணிபுரிகின்ற அதேவேளை தாய் மத்திய கிழக்கு நாட்டில் வீட்டுப்பணிப் பெண்ணாக தொழில் புரிகின்றார். பிள்ளைகள் மூன்று பேர் கொண்ட குடும்பத்தில் மூத்த மகளான மதுஷானி கல்வி நடவடிக்கைகளில் சிறந்து செயற்பட்டாலும் ஏனைய பொது விடயங்களிலோ அல்லது பாடசாலை விழாக்களிலோ முன் சென்று தனது ஆற்றல்களை வெளிப்படுத்துவதோ, மேடைகளில் உரையாற்றுவதற்கோ வெட்கப்பட்டு ஒதுங்கிச் சென்றுவிடுவாள். எனினும் கடந்த 2025.03.28ம் திகதி தனது பாடசாலையில் நடாத்தப்பட்ட பயிற்சியில் கலந்துக்கொண்ட மதுஷானி பயிற்சியின் ஒவ்வொரு விடயங்களையும் கூர்ந்து கவனித்து குழு வேலைகளிலே சிறப்பாக செயற்பட்டு குழுவின் சமர்ப்பணத்தை மிக நேர்த்தியாக, சத்தமாகவும், மிகத் தெளிவாகவும் சமர்ப்பித்தாள். அந்த வேளை “12ம் தரத்தில் கல்வி கற்றாலும் தான் இதுவரை சபைக்கு முன்னின்று உரையாற்றியதே இல்லை. இது முதல் தடவை” தாம்

மிகுந்த மகிழ்ச்சியாக இருப்பதாக தெரிவித்தாள். இதை பாடசாலை அதிபர் உறுதிப்படுத்தினார்.

## Case story

Her father works as a plantation worker, while her mother is employed as a housemaid in a Middle Eastern country. Madhushani, the eldest of three siblings, excels in academics but has always been shy, especially during public events, school functions, talent showcases, or speaking on stage.

However, after attending the leadership training organized by the Voice of the Plantation People Organization at her school in 2025, Madhushani showed remarkable progress. She paid close attention to every aspect of the training, excelled in group activities, and delivered her group's presentation clearly, confidently, and with a strong voice. Although she was in Grade 12 at the time, she had never spoken at a school assembly before. She expressed how happy she was to be the first to speak, and the school principal confirmed this achievement.

# GA/Divuthurai Tamail Maha Vidyalaya


## Galle District

















# MR/Bevarly Tamil Maha Vidyalaya

# Matara Disrict

















# MR/Deniyaya St' Methiw National Collage

# Matara District

















# GA/Thalgaswala Tamil Vidyalaya

## Galle District

















## GA/Thalanga Saraswathi Tamil Maha Vidyalaya

## Galle District

















# WE/K/ Clode Tamil Maha Vidyalaya

# Kalutara District

















# சிறகடிக்கும் மலையகத்தின் சிறகுகள்....

"වතුකරයේ ජනතා හඬ සංවිධානය"
பெருந்தோட்டத்துறை மக்கள் குரல் அமைப்பு
Voice of The Plantation People Organization (VOPP)

Head office: 9A, 2/1, Ave Maria Road, Negombo
Matara Coordination Office: 51 Mile Post, Deniyaya.
Registration : GA00272096 (The Company Act No 7 of 2007)
Tel: +94313134314/ +94777.034136
Tel: +94764043519(Deniyaya)
Email: voiceplantation@gmail.cmo / denialdas@gmail.com
Facebook: voice of the Plantation People Organization
(https://web.facebook.com/voice-of-plantation-organization-vopp
Blog: voppnews.blogspot.com
Web: vopp.org.lk